ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2023.12.13 |

இலங்கையுடனான 48 மாத காலம் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் முதலாவது மீளாய்வினை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை நிறைவுசெய்து, அதன் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சி.எ.உ. 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்) தொகைக்கான அணுகல் வசதியினை நாட்டிற்கு வழங்குகின்றது. பன்னாட்டு நாணய நிதியம் பின்வரும் ஊடக அறிக்கையினை 2023 திசெம்பர் 12 அன்று வெளியிட்டதுடன் அதனைக் கீழுள்ள இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

https://www.imf.org/en/News/Articles/2023/12/12/pr23439-sri-lanka-imf-executive-board-completes-first-review-under-eff-arrangement

## இலங்கையுடனான புதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான முதலாவது மீளாய்வினை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை நிறைவுசெய்கின்றது

- இலங்கையுடனான 48 மாத காலம் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் முதலாவது மீளாய்வினை பன்னாட்டு நாணய நிதியத்தின் சபை நிறைவுசெய்து, அதன் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சி.எ.உ. 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்) தொகைக்கான அணுகல் வசதியினை நாட்டிற்கு வழங்குகின்றது.
- நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையின் செயலாற்றமானது திருப்திகரமாயமைந்தது. ஒன்றைத் தவிர்த்து அனைத்துச் செயலாற்றப் பிரமாணங்கள் மற்றும் ஒன்றைத் தவிர்த்து அனைத்துக் குறிகாட்டி இலக்குகள் யூன் இறுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2023 ஒத்தோபர் இறுதியளவில் எட்டப்பட வேண்டிய கட்டமைப்புசார் அளவுகோல்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையினை அதிகாரிகள் வெளியிட்டு, ஆசியாவில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகையினைக் கண்டறிகின்ற செயற்பாட்டினை மேற்கொண்ட முதலாவது நாடாக இலங்கையினைத் தடம்பதிக்கச் செய்துள்ளனர்.
- படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீட்டெடுத்தல், அரசிறையினை அதிகரித்தல், ஒதுக்குத் தாங்கியிருப்புக்களை மீள்கட்டமைத்தல், பணவீக்கத்தினைக் குறைத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றினை நோக்கி அதிகாரிகள் பாராட்டத்தக்க முன்னேற்றமொன்றினை மேற்கொண்டுள்ளனர். ஆளுகையினை மேம்படுத்துவதற்கும் வறிய மற்றும் பாதிப்படையக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்குமான வலுவான அர்ப்பணிப்பு தொடர்ந்தும் இன்றியமையாததாயுள்ளது.

**வொஷிங்டன், டீசி:** 48 மாத காலம் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் முதலாவது மீளாய்வினை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை இன்று நிறைவுசெய்தது. முதலாவது மீளாய்வின் நிறைவு செய்தலானது சி.எ.உ. 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்) கொண்ட உடனடிப் பகிர்ந்தளிப்பொன்றினை அனுமதித்து, பன்னாட்டு நாணய நிதியத்தின் இதுவரையான காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சி.எ.உ. 508 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 670 மில்லியன்) கொண்டு வரும்.

2023 மாச்சு 20 அன்று வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட ஒப்புதலிற்கமைய இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மொத்த தொகை சி.எ.உ. 2.286 பில்லியன் (ஏறத்தாழ

ஐ.அ.டொலர் 3 பில்லியன்) ஆகும் (ஊடக அறிக்கையினைப் பார்க்கவும் (https://www.imf.org/en/News/Articles/2023/03/20/pr2379-imf-executive-board-approves-under-the-new-eff-arrangement-for-sri-lanka)). பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் மீட்டெடுத்தல், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சியின் அடிப்படையிலமைந்த கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை மேம்படுத்தல் என்பவற்றிற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு நிகழ்ச்சித்திட்டம் ஆதரவளிக்கின்றது.

இலங்கை தொடர்பிலான நிறைவேற்றுச் சபைக் கலந்துரையாடலினைத் தொடர்ந்து, பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. கெஞ்சி ஒகாமுரா பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

"பேரண்டப்பொருளாதார கொள்கை மறுசீரமைப்புக்கள் பலனளிக்கத் தொடங்கியுள்ளதுடன் துரித பணவீக்க வீழ்ச்சி, குறிப்பிடத்தக்க வருவாய்களின் அடிப்படையிலமைந்த இறைச் சீராக்கம் மற்றும் ஒதுக்குக் கட்டியெழுப்பல் என்பவற்றுடன் பொருளாதாரம் உறுதிப்பாட்டின் தற்காலிக சமிக்ஞைகளைக் காண்பிக்கின்றது.

"விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயலாற்றம் திருப்திகரமாயமைந்துள்ளது. செலவின நிலுவைகள் நீங்கலாக யூன் இறுதிக்கான அனைத்துக் கணியம்சார் செயலாற்றப் பிரமாணங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. வரி வருவாய்கள் நீங்கலாக அனைத்துக் குறிகாட்டி இலக்குகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அநேகமான கட்டமைப்புசார் அளவுகோல்கள் 2023 ஒத்தோபர் இறுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசியாவில் முதலாவதாக ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையொன்றினதும் கட்டமைப்புசார் அளவுகோலொன்றினதும் வெளியீடானது ஆழமாக வேரூன்றிய ஊழல் பலவீனங்களை நிவர்த்தி செய்வதனை நோக்கிய பாராட்டத்தக்க முதலாவது படிமுறையொன்றாகக் காணப்படுகின்றது. ஆளுகையினை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் அறிக்கையின் பரிந்துரைகளை காலந்தவறாது நடைமுறைப்படுத்தல் என்பன சகல பிரசைகளுக்கும் தெளிவாகத் தெரியக்கூடிய பொருளாதார நன்மைகளை வழங்கும்.

"உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு மற்றும் சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி என்பனவுடனான படுகடன் கையாளல் குறித்த இலங்கையின் கோட்பாட்டு ரீதியிலான உடன்படிக்கைகள் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி இலக்குகளுடன் இசைந்து காணப்படுகின்றன. அவை இலங்கையின் படுகடனை நிலைபேறான பாதையை நோக்கிச் செலுத்துவதில் முக்கியமானதொரு மைல்கல்லாகும். உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை விரைவாக நிறைவு செய்தல் மற்றும் கையொப்பமிடுதல் என்பன முக்கியமானதொன்றாகும். ஒப்பிடத்தக்க நியதிகள் தொடர்பில் வெளிநாட்டுத் தனியார் கடன்வழங்குநர்களுடன் தீர்மானமொன்றினை எட்டுதலுடன் இணைந்து உடன்படிக்கைகளின் காலந்தவறாத நடைமுறைப்படுத்தலானது இலங்கையின் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை நடுத்தர காலத்தில் மீட்டெடுக்க வேண்டும்.

"முழுமையான மற்றும் விரைவான மீட்சியினை நிச்சயப்படுத்துவதற்கு மறுசீரமைப்பு உத்வேகத்தினையும் மறுசீரமைப்புக்களின் வலுவான உரித்தினையும் நீடித்துநிலைபெறச்செய்வதானது மிக முக்கியமானதொன்றாகும். அரசிறைத் திரட்சியினை மேம்படுத்தல், செலவினங்களுடனான வலு விலையிடலை ஒத்திசைவாக்குதல், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்தல், வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை மீளுருவாக்குதல், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், ஊழலை ஒழித்தல் மற்றும் ஆளுகையினை மேம்படுத்தல் என்பவற்றினை முக்கிய முன்னுரிமையளித்தல்கள் உள்ளடக்கின்றன.

"அரசிறை நிர்வாக மறுசீரமைப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்ட வருவாய்களின் அடிப்படையிலமைந்த அரசிறைத் திரட்சியினை வலுப்படுத்தலானது நிகழ்ச்சித்திட்ட விலகல்களிலிருந்து மீட்சியடைவதற்கும் கடந்த கொள்கைக் குறைபாடுகளை இல்லாதொழிப்பதனை ஊக்குவிப்பதற்கும் இன்றியமையாததொன்றாயுள்ளது.

‘‘இலங்கை மத்திய வங்கி அதன் பணவீக்க இலக்கிடல் முறைமையின் நம்பகத்தன்மையினைப் பாதுகாக்கும் பொருட்டு பல்நோக்குடன் கூடிய பணவீக்க வீழ்ச்சி உபாயத்தில் தொடர்ந்தும் கவனம் செலுத்த வேண்டும். செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையினால் ஆதரவளிக்கப்பட்ட ஒதுக்குகளைத் திரட்டுவதானது விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் முக்கியமான முன்னுரிமையொன்றாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

‘‘வங்கி மீள்மூலதனவாக்கத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் மேற்பார்வை மற்றும் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுப்படுத்தல் என்பன நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு அத்தியாவசியமானதாயமைகின்றன.

‘‘சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை மேலும் வலுப்படுத்தல் மற்றும் சமூகச் செலவிடுதலைப் பேணுதல் என்பன வறிய மற்றும் பாதிப்படையக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்தும் இன்றியமையாதனவாயுள்ளன.